**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC.204/2020 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | **அ.சா.1** |
| Name | : | புஷ்பா |
| Father's Name/Husband Name: | | **ரவிச்சந்திரன்** |
| Village | : | எசனை |
| Taluk | : | **பெரம்பலூர்** |
| Age | : | 47/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 22.07.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 முதல் 3 வரை ஆஜர்.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது எசனை கிராமத்தில் வசித்து கூலி வேலை வருகிறேன். எதிரிகளை தெரியும். அவர்களுடன் இந்த வழக்கில் சம்பவம் குறித்து சமாதானம் ஆகிவிட்டேன். நான் மேல்நடவடிக்கை வலியுறுத்தவில்லை. நான் மருத்துவமனையில் சிகிச்சையிலிருக்கும்போது போலிசார் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் ஒன்று பெற்றார்கள். அதில் உள்ள **கையெழுத்து மட்டும் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அந்த புகாரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. எந்த தேதி, மாதம், வருடத்தில் என்னையும் என் அம்மாவையும் எதனால் எவ்வாறு தாக்கினார்கள் என்றோ, எவ்வாறு மிரட்டினார்கள் என்றோ என்னால் குறிப்பாக சொல்ல இயலாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 19.09.2018ம் தேதியன்று காலை 9 மணியளவில் வழக்கு சம்பவயிடத்தில் எனது அம்மா நாட்டாத்தினையும், என்னையும் இடம் சம்மந்தமான பிரச்சனையை மனதில் வைத்துக் கொண்டு எதிரிகள் குச்சியால் எனது அம்மாவின் உடலில் மற்றும் தலையில் அடித்து காயத்தை உண்டுபண்ணியும் என்னையும் இரும்பு பைப்பால் எதிரிகள் குச்சியாலும் கைகளாலும் அடித்து இரத்தக் காயத்தை உண்டுபண்ணினாாகள் என்றும் இடம் தங்களுக்கு சொந்தம் என்று கூறி கொலை மிரட்டல் செய்ததாக போலிசாரிடம் மருத்துவமனையில் புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.